**முதன்மைக் கல்வி அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம்**

வகுப்பு: 11 பாடம் : தமிழ்

**அரையாண்டுத் தேர்வு விடைக்குறிப்புகள் - 11.12.2019பி.ப**

## பகுதி - I

**I. சரியான விடை . 14x1 = 14**

1. ஈ) இவைமூன்றும்
2. இ) 27
3. ஆ) 1-(iii), 2 –( I), 3 –( iv) 4 –( ii)
4. ஆ) பவணந்தி முனிவர்
5. ஆ) அண்ணாமலையார்
6. அ) இ) மக்கள் அலை, மக்கள் வெள்ளம்
7. ஆ) பண்புத்தொகை
8. ஆ) அகவலோசை
9. இ) தொடுதிரை
10. இ) ய்,வ்
11. இ) தாகூர்
12. ஆ) மகிழ்ச்சி
13. ஆ) அடுக்குத்தொடர்
14. இ) ஜெயமோகன்

## பகுதி – II 12x2 = 24

### பிரிவு - 1

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக**

**15.** தன் இனத்தையும் மொழியையும் பாடாதக்கவிதை வேறில்லாத மரம், கூடில்லாத பறவை என்கிறார்

**16.** மதினா நகரில் மேல்மாடங்கள் மேருமலைபோல் உயர்ந்திருந்தன.

- அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த பேரொலி, பெருங்கடல் ஒலி போல் இருந்தது.
- மதீனா நகரின் வீதிகள், பிரபஞ்சம் போல் பரந்து விரிந்திருந்தன.
- அத்துடன் பெரிய மாளிகைகள் சிறிதும் இடைவெளியின்றி நெருக்கமாக அமைந்திருந்தன.
- தோரணங்களும் கொடிகளும் கட்டப்பபட்டுப் பொன்நகர்போல் பொலிந்தது.
- அதனால் மதீனாநகரம்,“ஒரு மாளிகை நகரம்” என்பது உறுதிப்பட்டது.

**17.** எண்ணச்சொல்கிறவர்கள் தாய்மொழியில் கற்பிப்போர் - ஆசிரியர்
எண்ணுபவர்கள் - தாய்மொழியில் கற்போர் - மாணவர்கள்

**18.** உண்ட உணவு செறித்தப்பின் உண்டால் மருந்து தேவையில்லை.

### பிரிவு - 2

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. உழப்படாத நிலம்

- வேதியியல் உரம் இல்லாத உற்பத்தி
- பூச்சிக் கொல்லி தெளிக்கப்படாத பயிர்ப்பாதுகாப்பு
- தண்ணீர் நிறுத்தாத நெல் சாகுபடி
- ஒட்டுவிதை இல்லாமல் உயர் விளைச்சல்

20. லெபூர் தொனேவின் ஒன்பது கப்பல்கள் வந்தபோது மக்கள் மகிழ்ததைக் கூறும்போது,"கப்பல்கள் வருகின்ற செய்தியைக் கேட்டதும், நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும், மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்ததுபோலவும், நீண்டநாள் தவமிருந்து புத்திரப் பாக்கியம் கிட்டினாற்போலவும்,

- தேவாமிர்தத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷப்பட்டார்கள்.
- அதைக் காகிதத்தில் எழுத முடியாது எனப் பதிவு செய்துள்ளார்
- இதுவே இவருடைய வருணனைத் திறனுக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

21. பூஜைக்குத் தேவையான மலர்களைத் தவிர வேறு எந்தப் பூக்களுடனும் நமக்கு அவசியம் எதுவும் இல்லை.

- நாகரிக வழக்கத்தில் காலத்துக்கேற்றபடி சீக்கிரமே வாடிடும் மலர்களுடன் தொடர்பு உண்டு.
- தோட்டக்காரனுடைய கைகளில் அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்கும்.
- மலர்ச்செப்பினுள் வழக்கம் போல் போவதும் வருவதும் தான் அவற்றின் வேலை .
- இதைதான் தாமஸிகம் அதாவது'மெடீரியஸியம்' என்கிறோம்.

<u>பிரிவு - 3</u>

**.எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் - 22

✓ அவை : உயிர் எழுத்து பனிரெண்டும் ( அ முதல் ஔ வரை)

✓ மெய் எழுத்துகள் (10) ( க, ங, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ)

23 . **அ. பிரிந்தோர் - பிரி+ த்(ந்) +த் +ஓர்**

பிரி – பகுதி
த் - சந்தி
ந் - ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
ஓர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**ஆ. துய்த்தல் - துய் + த் +த் + அல்**

துய் - பகுதி
த் - சந்தி
த் - எழுத்துப்பேறு
அல் - தொழில் பெயர் விகுதி

**24. புணர்ச்சி விதி**

**அ. நீரோடை – நீர்+ ஓடை**

விதி – உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே

**ஆ. சிறுகோல் - சிறுமை+ கோல்**

விதி - ஈறுபோதல்

**25. ஆக்கப்பெயர்கள்:**

அ) நூலகம்

ஆ) வருமானம்

**26. விகுதிகள்**

திணை, பால், எண், இடம், எச்சம் உணர்த்தும்.

**27. அறிவில்லாதவன்**

பாலன் ஒரு **அறிவில்லாதவன்**

**அறிவில்+ ஆதவன்** - கபிலன் அறிவில் ஆதவனாகத் திகழ்கின்றான்.

28. முயற்சி செய்தால் அதற்கேற்ற பலன் கிடைக்காமல் போகாது

29. கோசல நாடு ஒரு சிறந்த நாடு.

கோசல மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.

30. அ) ஆவணம் ஆ) ஒப்பந்தம்

**பகுதி – III** **7x4 =28**

<u>பிரிவு - 1</u>

**அ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**31.** என் தாய்மொழியாகிய தமிழ் அன்னையை தொழுதவர், உழுதவர், விதைத்தவர், உழைத்து வியர்த்தவர்கெல்லாம் நிறைவான செல்வம் தந்து மகிழ்ந்தவள்.

- அத்தகைய என் தமிழ் அன்னைக்கு பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பாடத்தான் வேண்டும் என்று சு. வில்வரத்தினம் குறிப்பிடுகிறார்.

**32.** புகழ் : தம் உயிரையும் கொடுப்பர்

பழி : உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்கமாட்டார்கள்.

**33. புகழுக்குரிய குணங்கள் :** அன்பு,ஈகை, ஒழுக்கம், பொறுமை, அடக்கம், இரக்கம், வாய்மை

**பொதுமறை வழி:** இணையற்ற உயர்ந்த புகழைப் போல உலகத்தில் ஒப்பற்ற ஒன்றாக நிலைத்து நிற்பது வேறொன்றும் இல்லை.

“ **ஒன்**றா உலகத்து உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற்பதொன்று இல்”

34 நமக்கு உணவு நல்கும் வயலுக்கு வாழ்வு அளிப்பது வாய்க்கால் ஆகும்.

- கற்களை கடந்து செல்லும் பொழுது, அதை நெருநெருவென நெருக்கி சிறு சிறு மணல் துகலாக மாற்றுவது வாய்க்கால் ஆகும்.
- மழைப்பொழிவின் நீரானது, ஆறுகளில். ஏறிகளில் சேமிக்கப்பட்டு , அதை முறையாக வயலுக்கு கொண்டு வருவது வாய்க்கால் ஆகும்.
- பெருமலை சிகரம் முதல், குன்றில் விழும் அருவி வரை பல குகைகளில் புகுந்து பூமியின் குடலாக பல நுழைந்தும், சுனைகளில் குதித்து எழுந்து ஓடியும்,
- ஊற்றாய் பரந்தும், ஆறாய் நடந்தும், மதகிடை தங்கியும் ஓடிவந்த வாய்க்காலே!
- இரவுப்பகல் பாராது ஓயாமல் உழைக்கும் உனைப்போல் உலகினில் உழைப்பவர் யாரென நடராசன் வாய்க்காலின் பெருமையை புகழ்ந்துக் கூறுகிறார்.

பிரிவு - 2

## ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.

**35.** பேச்சுக்கலை, அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.

- அதோடு அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும், பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.
- அவருடைய பாணி இரவல் பாணி அல்ல. கற்று அறிந்ததும் அல்ல.
- நம் நாட்டு மக்களின் தரத்தையும், அனுபவ அறிவையும், பழக்க வழக்கங்களையும், நம்பிக்கைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்ட ஒரு மனிதன்.
- விஷயத்தைக் கலைநோக்கோடு அணுகிக் கற்பனையும் கலந்து நாளடைவில் வெற்றிகரமாக அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி அவருடையதாகும்..
- பேச்சு பயனைத் தரவேண்டுமென்றால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பதும் அவருக்குத் தெரியும்.

**36** சுண்ணாம்புக்காரைப்பூச்சு மீது அதன் ஈரம் காயும் முன் வரையப்படும் பழைமையான ஓவியக் கலை நுட்பத்திற்கு ஃப்ரெஸ்கோ ஓவியம் என்று பெயர்.

- ✓ இத்தகைய ஓவியம் அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் இருப்பவையாகும்.
- ✓ செங்கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டுவதுபோல, கருங்கற்களை அடுக்கிக் கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர்
- ✓ கற்றறி கோயிலுக்கு உதாரணம் மகாமலிபுரம் கடற்கரைக் கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் போன்றவையாகும்.

**37.** திராவிடர்கள் அடிப்படையில் மலைவாழ் மக்கள்.

- திராவிடர்களை, ‘மலைநில மனிதர்கள’ என்று அழைக்கிறார் கமில் சுவலபில்
- “சேயோன் மேய மைவரை உலகம்” - என்று தொல்காப்பியம் உரைக்கிறது.
- “விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ” என்று திருமுருகாற்றுப்படை உரைக்கிறது.
- மேற்குறிபிடப்பட்டுள்ள பாடல்கள் தமிழரின் கடவுளையும் மலையையும் தொடர்பு படுத்திய பதிவுகளாகும்.
- கடையெழு வள்ளல்களும் மலைப்பகுதிகளின் தலைவர்களாகத் திகழ்ந்தவர்கள்.
- தமிழ்நாட்டில் மட்டும்’மலை’ என்ற சொல் 17 இடப்பெயர்களில் முன்னொட்டாகவும்
- 84 இடங்களில் பின்னொட்டாவும் இடம்பெற்றுள்ளன.
- இவ்வாறு மலையானது அன்றும் இன்றும் மனிதவாழ்வில் சிறப்பிடம் பெற்றுத்திகழ்கிறது.
- 38. பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன் மூலம் அதிக வருவாய் கிடைக்கும்.
- இவ்வாறு ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப்பொருள் என அழைக்கின்றனர்.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.**

**39 அணி :** இரண்டு பொருளுக்கும் ஒத்த பண்பினைக் கூறி, ஒன்றினை மட்டும் வேறுபடுத்திக் கூறுவது வேற்றுமை அணி ஆகும்.

**எ.கா:** தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

**விளக்கம்** : தீயினால் ஏற்பட்ட புண் எளிதில் ஆறிவிடும். ஒருவர் நாவினால் சுட்ட வடு என்றும் மாறாது.

**பொருத்தம்** : தீயும், தீச்சொல்லும் சுடும் தன்மை உடையன. ஆனால் தீச்சொல் மாறாத வடுவாக இருக்கும் என வேறுபடுத்திக் காட்டுவதால் இது வேற்றுமை அணிக்கு பொருத்த மாயிற்று.

**அல்லது**

**அணி :** இக்குறட்பாவில் பிரிது மொழிதல் அணி பயின்று வந்துள்ளது.
ஒரு கருத்தினைக் கூறி, அக்கருத்தின் வாயிலாக வேறொன்றினை அறிவுறுத்துவது பிரிது மொழிதல் அணி ஆகும்.

**எ.கா:** இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து

**விளக்கம் :** சிறிதாக இருக்கையிலேயே முள்மரத்தைக் களைந்து விடுக! முதிர்ந்துவிட்டால் வெட்டுபவரின் கையையே வருத்தும்.

**பொருத்**தம் : முள் மரத்தை வெட்டுவதை கூறுவது போல, பகைவர் வலிமை பெறும் முன்பே அவர்களை அழித்துவிட வேண்டும் என்பதே அதன் உட்கருத்தாகும். இவ்வாறு கூறப்பட்ட கருத்திலிருந்து பிறிதொன்றை உணர்த்துவது, பிறிது மொழிதல் அணி ஆகும்.

**40.** மையக்கருத்து : இரத்ததானம் கொடுப்பதால் உடல் நலம் பெறும். இரத்தம் தானமாக கொடுத்தல் வேண்டும்.

தொடை நயம் :

மோனை : - **பெ**ண்ணுக்கு – **பே**ணி , **ம**ண்ணுக்குள் - **மா**தர்,

எதுகை – பெ**ண்**ணுக்கு, ம**ண்**ணுக்கு, க**ண்**கள், பெ**ண்**கள்

அணி – இயல்பு நவிற்சி, உருவகம்

சுவை – பெருமிதம்

**41. மாணவனின் கற்பனை**

**42. தமிழாக்கம்**

அ) கல்வி ஓர் ஆற்றல் வாய்ந்த கருவி. அதைக் கொண்டு உலகை மாற்றலாம்.

ஆ) இயற்கையை உற்றுப் பார். அனைத்தையும் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம் - ஆல்பிரட் ஐன்ஸ்டீன்

இ) கண்ணுக்கு கண் என்ற சொல் இந்த உலகத்தை குருடாக்கிவிடும்.(பழிக்குப் பழி)

ஈ) இந்த உலகத்தை அணுகும் விதத்தைக் கண்டிப்பாக மாற்ற வேண்டும்.

43. மூலப்படியில் உள்ளபடியே செய்திகள் அச்சாகியுள்ளனவா? என்று ஒவ்வொரு வரியையும் படித்துக் கவனித்தல் வேண்டும்.

- அச்சுப்படி திருத்துவோர் செய்தியின் உருவையோ உள்ளடக்கத்தையோ மாற்றுதல் கூடாது.

- ஒரு வரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிழைகள் இருந்தால் பிழைகளைக் குறிக்கும் கோடுகளைத் தெளிவாகக் காட்டல் வேண்டும்.
- அச்சுப்படியில் இருக்கும் வண்ணத்திற்கு மாறான வண்ணமுடைய மையால் திருத்துதல் வேண்டம். இது பிழைகளைத் தெளிவாகக் கண்டறிய உதவும்.

## பகுதி – IV 3x6 = 12

**பின்வரும் வினாக்களுக்கு இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.**

44. ஒரு நூலைப் புரிந்துகொள்ளவும், அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது.

- நூலுக்கு முன் சொல்லப்படுவது முகவுரை ஆகும்.
- பாயிரத்தைதான் முகவுரை,பதிகம்,அணிந்துரை,புனைந்துரை,நூல்முகம்,புறவுரை,தந்துரை என்று வழங்குவர்.
- நன்னூலில் பொதுப்பாயிரம் , சிறப்பு பாயிரம் என இருவகைகள் நூலின் முகவுரைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.
- பொதுப்பாயிரத்தில் வாயிலாக அறியப்படும் செய்திகள்:
  நூலின் இயல்பு, ஆசிரியரின் இயல்பு,கற்பிக்கும் முறை,மாணவர் இயல்பு,கற்கும் முறை இவை ஐந்து கருத்துகளும் பொதுப்பாயிரத்தின் வாயிலாக அறியப்படும் கருத்துகள் ஆகும்.

- சிறப்பு பாயிரத்தால் அறியலாகும் செய்திகள் :
  நூலாசிரியர் பெயர்,நூல் பின்பற்றிய முறை, நூல் வழங்கப்படுகின்ற முறை,நூலின் பெயர்,தொகை, வகை, விரி ஆகியவற்றுள் இயற்றப்பட்ட யாப்பு வகை,நூலில் குறிப்பிடப்படும் கருத்து,நூலை கேட்போர் (மாணவர்),நூலைக் கற்பதால் பெருகின்ற பயன ஆகிய எட்டு செய்திகளைத் தெரிவிப்பது சிறப்பு பாயிரமாகும்.
- மாடங்களுக்கு (மாளிகை) ஓவியங்களும்
- நகரங்களுக்கு கோபுரங்களும்
- அழகிய மகளிருக்கு அணிகலன்கள் அழகுதருவது போல
- எல்லாவகை நூல்களுக்கும் முன்னர் அழகு தருவது அணிந்துரை ஆகும்.

**(அல்லது)**

**முன்னுரை**: வடமொழி பில்கணீயத்தை தழுவி இயற்றப்பட்டது, பாரதிதாசனின் 'புரட்சி கவி'ஆகும். அரசன் என்பவன் குடிகளுக்காகவே என்பதை பல கவிஞர்கள் உணர்த்தினாலும் , பாரதிதாசன் புரட்சி கவியில் ஆணித்தரமாக சொல்லிய கருத்தை பின்வருமாறு காண்போம்.

**உழைப்பவனே உயர்ந்தவன்:**

✓ காட்டை, மேட்டை, புதரை, பாழ்நிலத்தை திருத்தி கழனியாக மாற்றியவர்கள் உழைப்பாளிகள்.
✓ ஓடிவருகின்ற ஆற்றுநீரைத் தடுத்து குளம் குட்டை ஏரிகளை அமைத்ததும் உழைப்பாளிகள்
✓ இவற்றின் நீர்களை நிலங்களுக்கு கொண்டு செல்ல வாய்க்காலை வெட்டியதும் உழைப்பாளிகள்.

- ✓ கல்லையும் மலையையும் பிளந்து கனிம வளங்களை நாட்டிற்கு வெட்டித்தந்தவர்கள் உழைப்பாளிகள்
- ✓ கடலில் மூழ்கி முத்தெடுத்ததும் உழைப்பாளிகள்.
- ✓ நாட்டில் எல்லா வளங்களும் உழைப்பாளிகளின் தோள் வலிமையால் விளைந்தனவையே என்று பாரதிதாசன் உதாரன்வழியாகக் கூறுகிறார்.

**எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்:**

- ✓ அரசனின் தேவைக்குத்தான் நாடு என்றால் இந்நாடு அழிவதே மேல். நாடு அனைவருக்கும் பொதுவுடைமாக இருக்க வேண்டும்.

**மொழிப்பற்று:**

- ✓ தமிழ் மொழிக்குப் பழிவந்தால் ஏற்றுக்கொள்ளக்கூடாது. குற்றம் இல்லாத உயர்தமிழை உயிரென்று போற்ற வேண்டும் என்று உதாரன் பொதுமக்களிடம் கூறுகிறான். இதன் மூலம் ஒவ்வொருவருக்கும் மொழிப்பற்று அவசியம் என்பதை வரிகளால் புரட்சி செய்தவர் பாரதிதாசன்.

**முடிவுரை:**

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் இதுவே மக்களாட்சியின் அடிப்படை கூறுகளாகும். இதை உணர்ந்து மக்களாட்சியை போற்றுவோம் எனும் நோக்கில் இமைந்துள்ள, பாரதிதாசனின் 'புரட்சி கவி" ஒரு புரட்சியே ஆகும்.

**45.** மலை மனித சமூகத்தின் 'ஆதி' நிலமாகும். அகத்திணையியல், மலை சார்ந்த பகுதியை குறிஞ்சி எனக் குறிப்பிடுகிறது.

**இலக்கிய பதிவு:**

- சேயோன் மேய மைவரை உலகம் - தொல்காப்பியம்
- விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ - திருமுருகாற்றுப்படை
- கடையெழு வள்ளல்கள் மலைகளின் தலைவராக விளங்கினர்

**இயற்கையோடு இயைந்த வாழ்வின் இருப்பிடங்கள்**

- திராவிட மலைவாழ் மக்களின் குடியிருப்புகள், அப்பழங்குடியினர்தம் மலை சார்ந்த வாழ்வியலின் சமூக, சமயக் கூறுபாடுகள் குறித்த புரிதலைத் தருகின்றன.
- ஓடும் நீரையே தங்கள் குடிநீராகப் பயன்படுத்தும் இயல்புடையவர்கள்
- தங்கள் குடியிருப்பு பகுதியைவிட உயரமான இடத்திலோடும் சிற்றாறுகள்,ஓடைகள் இவற்றிலிருந்து நீர் எடுத்து பருகுகிறார்கள்.
- நீலகிரியில் உள்ள தோடர் இனத்தவர் பால் எருமைக் கொட்டில்களைப் புனித இடமாகக் கருதுபவர்கள். எனவே அவற்றைச் சுற்றி உயர்ந்த மதிற்சுவர்களை அமைத்திருக்கின்றனர்.
- அவர்களின் வீடுகளில் திண்டுகள்(மேடைகள்) முக்கிய இடம் பெறுகின்றன.
- பழங்குடித்தலைவரின் வீடு, மற்ற வீடுகளை விட உயரமான இடத்தில் அமைந்துள்ளது.

www.Padasalai.Org www.Padasalai.Org www.Padasalai.Org www.Padasalai.Org www.Padasalai.Org

- உயரமான மேடை, திண்ணை, சுற்றுச்சுவர்கள், மேலோடை நீர் ஆகியவை திராவிடப் பழங்குடியினரின் வாழ்விட வடிவமைப்பிலும் வாழ்வியலிலும் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தைக் காட்டுகின்றன.

**மலை, வரை, கோட்டை**

- வரை, கோடு, மலை, சிகரம், விளிம்பு, கரை, எல்லை, நுனி
- நுனி முதல் அடி வரைமற்றும் அடி முதல் நுனி வரை
- வரை என்ற சொல் விளிம்பு என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது.
- தமிழ் மொழியில் 'கோட்டை' என்னும் சொல், காவல் மிகுந்த காப்பரண் கொண்ட மதில் சுவர்களால் சூழப்பட்ட கட்டமைப்பைக் குறிக்கிறது.

**முடிவுரை:**

இத்தகைய சீரும் சிறப்பும் மிகுந்த நம் திராவிட வாழ்விடங்களை பற்றி, அறிந்து நம் பண்பாட்டையும்,நாகரிகத்தையும் காப்போமாக.

**(அல்லது)**

✓ **முன்னுரை:** தமிழகத்தில் பழங்காலத்திலேயே சிற்பம், கட்டடம்,ஆடல், பாடல் முதலிய கலைகள் சிறப்புற்றிருந்தன. ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் கம்பீரமாகக் காட்சியளிக்கும் தஞ்சைப் பெரிய கோவிலின் கலை நுட்பத்தை நமமால் வியந்து கூற இயலாது.

✓ **கேரளாந்தகன் வாயில் :**
பெரியகோவிலின் கோபுரங்களில் உயரமானது கேரளாந்தகன் கோபுரம். இராசராசன் 988 ஆம் ஆண்டு சேரநாட்டை வென்றதற்கு அடையாளமாக இக்கோபுர வாயிலுக்கு இப்பெயரினை சூட்டி மகிழ்ந்தான்.

✓ **தட்சிண மேரு:**
தஞ்சைப் பெரிய கோவில் நம் நாட்டிலுள்ள கற்றளிக் கோயில்களிலே மிகப்பெரியதாகும். இராசராசனால் ஆறு ஆண்டுகள் முயன்று கட்டியது ஆகும் தான் கட்டிய இக்கோயிலை தட்சிணமேரு என்று அழைத்தார். இக்கோவிலின் விமானம் 216 அடி ஆகும் இதில் உள்ள கருவறை விமானம் 13 தளங்களை உடையது.

✓ **பயன்பாட்டின் இருப்பிடம்:**
கோயில் பொதுமக்கள் ஒன்று கூடும் இடமாக இருந்தது. அதனால்தான் செய்திகளை கல்வெட்டில் பொறித்தனர். தானியகிடங்குகள், கருவறைகள் மருத்துவ மனைகளாக, படைவீரர்கள் தங்குமிடமாகவும் கட்டப்பட்டதே பெரிய கோயிலின் சிறப்பாகும்.

✓ **இந்திய கலைப்பாணி:** இந்தியக் கட்டக் கலைப்பாணியை நாகரம்,வேசரம், திராவிடம் என்று மூன்றாகக் கூறுவர். அதில் தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைபாணியாகும்.

✓ **கல்லால் கவிதை:**
சிகரத்தில் உள்ள பிரமந்திரக் கல் ஒற்றைக்கல் அன்று. பதின்மூன்று தளங்களை உடைய கருவறை விமானத்தின்மேல் எண்பட்டை அமைப்பில் ஆரஞ்சுப்பழச்சுளை போன்று எட்டுக் கற்கள் நெருக்கமாக வைத்து ஒட்டப்பட்டன.

✓ **சிறப்பு:** கற்களே கிடைக்காத காவிரிச் சமவெளிப் பகுதியில் இவ்வளவு உயரத்தில் ஒரு கற்கோவில். தஞ்சையின் பெருமை இந்தக் கோவில்.

✓ **முடிவுரை :** கல் கூறும் கதையில் உலக புகழ் பெற்ற இக்கோயிலை வடிவமைத்த தச்சர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டிருப்பது. அம்மன்னனின் உயர்ந்த மாண்பு இங்கே புலப்படுகிறது.

**46. முன்னுரை:**

✓ மனிதனின் கீழ்மை செயலால் நாள்தோறும் வன உயிரிகள் அழிந்து வருகின்றன.

✓ சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் சிலர், மது அருந்திவிட்டு அதன் குப்பிகளை மரத்தின் அடியில் போட்டுவிடுகிறார்கள்.

✓ யானை போன்ற பெரிய விலங்குகளின் காலில் குத்தி, எளிதில் உள்ளே புகுந்து உயிரைக்கூட கொன்றுவிடும்.

✓ மனிதரை அடையாளம் கண்டுகொண்டு 300 கிலோ மீட்டர் வரை பயணிக்கம் யானை, உயிர்போகின்ற வலியை கூட தாங்கிக்கொள்ளும் இத்தகைய அருமை மிகுந்த காட்டின் மூலவர் என அழைக்கப்படும் யானை அழிவதற்கு மனிதர்கள் தான் காரணமாகிறார்கள்.

✓ இறைவன் எல்லா உயிர்களையும் வாழ்வதற்காக படைத்தளித்துள்ளார்.

✓ ஆனால் மனிதன் தன் சுயநலத்திற்காக, எந்த உயிரும் வாழாமல் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற கருத்தில்

✓ காடுகளை அழித்தல், விலங்குகளை வேட்டை ஆடுதல், பிற உயிர்களின் வாழ்வாதரத்தை

அழித்து, அவ்வுயிரிகள் அழிவதற்கு காரணமாதல் போன்ற செயல்களை செய்து வருகிறான்.

✓ சிந்தியுங்கள் மனிதர்களே! டாக்டர் ஜே.கே. போன்ற மனிதர்கள் தன் வாழ்நாளையே வன உயிரினங்களுக்காக அர்ப்பணித்து வாழும்போது,

✓ நாம் சிறிதேனும் முயற்சி செய்யலாமே!

✓ மரங்களை நடுவோம். பறவைகளுக்கு பருக நீரையும், இரையையும் வீட்டு மாடியில் வைப்போம்.

✓ சுற்றுலா தலங்களுக்கு செல்லும் பொழுது, அவ்வுயிரிகளுக்கு இடையூறு தராமல் இருப்போம்.

✓ சுற்றுலா பார்வையாளர்கள் கண்ணில் படும்படி வாசகங்களை எழுதிய அட்டைகளை அமைப்போம்.

✓ வன உயிரி பாதுகாப்பு குறித்து மேடைகளில் பேசுவோம்.முழக்கம் இடுவோம்.

**(அல்லது)**

**முன்னுரை:**

நம் ஒவ்வொருவருக்கும் தனித்தன்மைகள், விருப்பங்கள் உள்ளன. ஆயினும், பிறரோடு உறவு கொள்கையில் அவர்களுக்கேற்றவாறு நம்மை மறைத்து, மாற்றிக் கொள்கிறோம்.மாற்றி மாற்றி நாம் காட்டுகிற பிம்பம் பற்றி நம் மனசாட்சியைக் கேள்வி கேட்பதோடு நம் அசலையும் நினைவூட்டுகிறது இச்சிறுகதை.

**என்னுடைய மனசாட்சி:**

என்னுடன் வளர்ந்து நானாகவே மாறிவிட்டது என்னுடைய மனசாட்சி. கதவை திறந்து உள்ளே வந்து உக்காரச்சொன்னேன் என் மனசாட்சியை . அது உட்காராமல் வீட்டைச்சுற்றி

நோட்டமிட்டது.அதன் பார்வை ஓரிடத்தில் நிலைக்குத்தி நின்றது. தான் துப்பிய எலும்பில், எறும்புகள் தன் சக்திக்கு தகுந்தபடி அதன் உணவாக அதை இழுத்துச்சென்றன். ஈக்கள் மொய்த்தன. அக்காட்சியைக்கண்ட என் மனசாட்சி, குறுநகையோடு என்னைப்பார்த்தது. எனக்கு வெட்கமாய் போனது.

**அறைக்குள் இருந்து அள்ளி வந்தவை:**

- என் தகப்பனாரின் முழக்கை சட்டை அது. கைப்பட்டால் நறைந்துவிடும் நிலையில் இருந்தது. இது எதற்காக இன்னும் வைத்திருக்கிறாய்? என்று கேட்டது. சமயத்தில் அணிந்துக்கொள்தான் என்று பதிலளித்தேன். உன்னிடம் பல உடுப்புகள் இருக்கும் பொழுது இதையேன் வைத்திருக்கிறாய் என்றது. கதகதப்பிற்கு இதுவே உகநதது என்றேன்.
- வேறொரு அறையிலிருந்து பெண்பிள்ளையின் கவுன் ஒன்றை சுட்டிக்காட்டி, இதையும் உடுத்துவாயா? என்றது. ஆம்! என் தாயார் வயிற்றில் பெண்பிள்ளை பிறக்கவில்லை என்ற குறைக்கு எனக்கு இவ்வாடை அணிந்து அழகு பார்த்தாள் அன்று. சடை பின்னி, பூச்சூட்டி, பொட்டிட்டு, ஒட்டியானம் கட்டி என்னை அழகு பார்த்தாள். புகைப்படம் என் தலைக்கு மேலே இருந்தாலும். என் நெஞ்சில் அழுந்த இருக்கும் புகைப்படம் மறையவில்லை என்றேன்.
- வேறொரு அறையிலிருந்து மிகுந்த சத்தத்துடன் என் காலடியில் பொருள்களை அள்ளிக்கொண்டு வந்து போட்டது. இதெல்லெம் என்ன என்றது. நான் அணிந்துக்கொண்ட முகமூடிகள் என்றேன்.
- உன் மனைவிடம் கூட முகமூடியோடு வாழ்கிறாய் என்றது..ஆம்! அவளுக்கென்று முகமூடியும் உண்டு. நானும் அதை போலத்தான் என்றேன்.

- ஒவ்வொரு முகமூடியையும் காலால் தள்ளி, இது என் நண்பர்களுக்காக, இது என் தெருக்காரர்களுக்காக, இது என் உறவுகளுக்காக என்று ஒவ்வொரு முடிமூடியையும் காட்டினேன்.

**இறுதியாய் :**

நீ இப்போது போட்டிருப்பதும் என்றது. பொய்தான், போலிதான் என்றேன்.நான் முகத்தைக் கழட்டி கீழே போட்டேன். நிமிஷங்கள் கரைந்து நீராயின . போய்வருகிறேன் என்றது.. கதவை திறந்து விடைக் கொடுத்தேன். சற்று நின்றது. உன்னுடைய முகம்தான் எது என்றது. எனக்கென்று முகமே கிடையாது எனக்கூறி கதவை தாழிட்டுக்கொண்டேன்.

**முடிவுரை:**

பிம்பம் என்ற கதையில் பிரபஞ்சன் கூறவிழைவது. யாருக்கும் நிஜமுகமென்று தனியாக எதுவுமில்லை. உலக இயக்கத்திற்கு ஏற்ற வகையில் நிமிடத்திற்கு நிமிடம் நம்மை மாற்றிக்காட்டுவதுதான் நிஜம். உலகம் என்ற கண்ணாடியில் தெரிவதுதான் நம் நிஜம் எனும் பிம்பமாகும்.

(எவையேனும் நான்கு தலைப்புகள் அல்லது எட்டு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்)

பகுதி - V 4+2 = 6

**VIII. அடிமாறாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

**47.**

அ) ஏடு தொடக்கி வைத்து என்னம்மை
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெல்லாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

ஆ) தாளாற்றி தந்த பொளுளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

தயாரிப்பு : முதுகலைத் தமிழாசிரியர்கள் குழு,
திருவண்ணாமலை.